நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை-2, அவர்களின் நடவடிக்கைகள்
807, அண்ணா சாலை, சென்னை- 600 002
முன்னிலை: திரு.ஆ.கார்த்திக், இ.ஆ.ப.,
www.tn.gov.in/dtcp
Email Id: dtcp@vsnl.net

ந.க.எண்.18959/2013/சிபி நாள்.10.02.2014

பொருள்: கட்டிடம் - நகர் ஊரமைப்பு ஆணையர் அலுவலகம், சென்னை-2 - கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் / மாநகராட்சி - காளப்பட்டி விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்.19, கோயம்புத்தூர் வடக்கு வட்டம் - காளப்பட்டி கிராமம் - சர்வே எண்கள்.433/1C, 434/1 - 14113.00சமீ பரப்பளவு மனை ஒப்புதல் - பலமாடி தொகுப்பு குடியிருப்புகள், EWS, Club House உபயோக கட்டுமானத்திற்கு திட்ட அனுமதி வழங்க இசைவளித்தல் - குறித்து.

பார்வை:
1. மனுதாரர் M/s.Durandel Property Developers (P) Ltd., கோயம்புத்தூர் என்பவரது மனு நாள்.26.11.2013 மற்றும் 23.08.2013.
2. உறுப்பினர் செயலர் (பொ), கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் கடிதம் ந.க.எண்.6767/2012/உதிகு-2, நாள்.17.09.2013.
3. இவ்வலுவலக கோப்பு எண்.2840/2013/சிபி, பலமாடி கமிட்டி கூட்டம் நடைபெற்ற நாள்.26.09.2013.
4. அரசாணை (நிலை) எண்.86, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்.28.03.2012.
5. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7486/2009/பிஏ2, நாள்.16.04.2009.
6. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21075/2009/பிஏ1, நாள்.04.04.2012.

-----

Technical Clearance issued is valid after payment of I & A charge and permission of LPA/NTDA/Regional authority.

உத்தரவு:

கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் / மாநகராட்சி, காளப்பட்டி விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்.19, கோயம்புத்தூர் வடக்கு வட்டம், காளப்பட்டி கிராமம், சர்வே எண்கள்.433/1C, 434/1-ல் 14113.00சமீ பரப்பு கொண்ட மனைக்கு A முதல் I வரை என எல்லையிட்டு திட்ட விதி 15(i)-ன் படி மனையிட ஒப்புதலும் அம்மனையில்

Area Statement (FSI Area in Sqm):

| Details | Block-A | Block-B | Block-C | Block-D (EWS) |
|---|---|---|---|---|
| Part Combined Basement | Parking | Parking | Parking | Parking |
| Stilt | Parking | Parking | Parking | Parking |
| 1st Floor | 1219.74 | 1008.24 | 873.27 | 403.89 |
| 2nd Floor | 1219.74 | 1008.24 | 873.27 | 403.89 |
| 3rd Floor | 1219.74 | 1008.24 | 873.27 | 403.89 |
| 4th Floor | 1219.74 | 1008.24 | 873.27 | 403.89 |
| 5th Floor | 1219.74 | 1008.24 | 873.27 | 403.89 |
| 6th Floor | 1219.74 | 1008.24 | 873.27 | 403.89 |
| 7th Floor | 1219.74 | 1008.24 | 873.27 | - |
| Total No of Dwelling Units | 9 Dwelling Units per floor x 7 floors | 8 Dwelling Units per floor x 7 floors | 7 Dwelling Units per floor x 7 floors | 8 Dwelling Units per floor x 6 floors |

**Club House**

| | | |
|---|---|---|
| Ground Floor | - | 388.42Sqm |
| 1st Floor | - | 417.55Sqm |
| 2nd Floor | - | 272.84Sqm |
| Swimming pool | - | - |
| OSR | - | 1430.00Sqm |

மேற்கண்ட உத்தேச பலமாடி தொகுப்பு குடியிருப்புகள், EWS, Club House உபயோக கட்டுமானத்திற்கு திட்ட விதி 8(viii) தளர்த்தி மனை ஒப்புதல் சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி ஒழுங்க இசைவு அளிக்கப்படுகிறது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு க.வ/ந.ஊ.இ.எண். 32/2014 என எண்ணிட்டு அனுப்பப்படுகிறது.

சிறப்பு நிபந்தனைகள்:

1. The Project proponent / Applicant shall not commence any activity, excepting fencing of the site and construction of temporary shed for guard, without obtaining Environmental Clearance under the EIA Notification, 2006 from the State Level Environment Impact Assessment Authority or the Ministry of Environment and Forests, Government of India, as applicable to the project, as per the threshold limits. Any violation from the above requirement is liable for action under section 19 of the Environment (Protection) Act, 1986.

2. கட்டிட அனுமதிக்கு இசைவளிக்கப்பட்ட இடஅமைப்பு வரைபடத்தில் கண்டுள்ள பொது உபயோக ஒதுக்கீடு திறவிடங்கள் தானமாக பத்திர பதிவு செய்து மனுதாரரால் சம்மந்தப்பட்ட உள்ளாட்சிக்கு ஒப்படைக்க வேண்டும். பத்திர நகல்கள் இவ்வலுவலகத்திற்கும், சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கும் ஒருவார காலத்திற்குள் அனுப்புதல் வேண்டும்

3. பொது ஒதுக்கீடு திறவிடங்கள் நிறுவனத்தின் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற்று பராமரிக்க வேண்டும்

4. பொது ஒதுக்கீடு திறவிடங்களை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி தானமாக பெற்றுக் கொண்டு அதன் விவரம் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். இதனை சம்பந்தப்பட்ட அலுவலகம் உறுதி செய்து கொள்ள வேண்டும்

5. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations

6. மத்திய மற்றும் மாநில அரசு துறையினிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

7. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

8. To obtain consent from Tamil Nadu Pollution Control Board Under Section 25 of the water Act 1974 for discharge of sewage.

<u>நிபந்தனைகள் :</u>

1) உத்தேச பலமாடி தொகுப்பு குடியிருப்புகள், EWS, Club House உபயோகக் கட்டுமானத்திற்கு Solar Water heating System அமைக்கப்பட வேண்டும்.

2) வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்

3) மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்

4) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன்அனுமதி பெறப்பட வேண்டும்.

5) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்:11.10.02-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

6) உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.

7) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

8) உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

9) அரசாணை எண்.341/ந.நி. மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள்:3.11.2004-ன்படி செப்டிக் டேங்க்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.

10) சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.

11) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

12) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் அசல் நகலுடன் ஏற்கனவே அளிக்கப்பட்ட உத்திரவு மற்றும் இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

முத்திரை இடப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

பார்வை 4, 5 மற்றும் 6-ல் காணும் அரசாணை மற்றும் சுற்றறிக்கையின்படி உரிய மனை ஒப்புதல், நன்னிலை வரி, உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணம் உறுப்பினர் செயலர் (பொ), கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்கள் பெற்று இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட பின்னர் திட்ட அனுமதி வழங்கப்படல் வேண்டும்.

கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர்(பொ), அவர்கள் மேற்கொண்டு உத்தரவினை விண்ணப்பதாரருக்கு வழங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை சான்றினை அனுப்புமாறு கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் (பொ), அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

<u>இணைப்பு:</u> மூன்று தொகுப்பு வரைபடங்கள்

(ஒம்)/- ஆ.கார்த்திக்
நகர் ஊரமைப்பு ஆணையர்

<u>பெறுநர்:</u>
உறுப்பினர் செயலர் (பொ),
கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம்
கோயம்புத்தூர்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

12/2/14
நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்

கி.சி.12.02.2014.